REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 31உ வெள்ளி (15—7—55) ★ ★ வெளியூர்: ஆனி 32உ சனி (16—7—55) [இதழ் 27

உலக மக்கட் தொகை ஆண்டு தோறும் மூன்றரை கோடி உயருகிறது!

உலக மக்கட் தொகை, ஓராண்டில் மூன்றரை கோடி உயர்ந்துள்ளதென கணக்கிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஐ. நா. சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின்படி, 1954ம் ஆண்டு மத்தியில் உலக மக்கட் தொகை 252.8 கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

1953-ம் ஆண்டு மத்தியில் இது 249.3 கோடியாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்கவும்)

ரூ. 7 கோடி செலவில் காற்றுப் பொறி திட்டம்!

குறைந்த செலவில் மின்சாரம் வழங்கும் முயற்சியாம்!

அதற்கான ஆராய்ச்சி நிலையத்தை எங்கு நிறுவுவது?

சௌராஷ்டிரத்திலா கோவையிலா—என்பதில் முடிவில்லையாம்!

புதுடில்லி, ஜூலை 15—

சிறிய துண்டு நிலங்களுக்கும், தோட்டங்களுக்கும் நீர்ப்பாசன வசதியை அதிகரிக்கவும், கிராமப் புறங்களுக்கும், கிராமத்தவர் வீடுகளுக்கும், சிறு சிறு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான மின்சார வசதி அளிக்கவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், காற்றின் உதவியினால் இயங்கக்கூடிய காற்றுப்பொருள்கள் பொருத்தப்பட்ட ஆலைகள் கட்டப்படும் என்றும், ரூ. 7 கோடி செலவில் காற்று வசதி அதிகமாக உள்ள இடங்களில் சுமார் 20,000 முதல் 30,000 வரையில் இதுபோன்ற ஆலைகள் நிர்மாணிக்கப்படவேண்டுமென்பதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் மரக்கட்டைகளாலும், மூங்கில்களாலும் கட்டப்படும் இத்தகைய ஆலைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 800 முதல் ரூ. 1,000 வரை செலவாகும் என்றும், தற்போது வெளியிடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆலை ஒவ்வொன்றின் விலை ரூ. 3,000 முதல் ரூ. 4,000 வரை உள்ளது என்றும் கூறப்படுகிறது.

விஞகச் செலவழியும் காற்றின் சக்தியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆராய்ச்சிகள் நடத்த ரூ. 10 லட்சம் செலவில் ஒரு புதிய கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி நிலையத்தை நிறுவவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையம் எந்த இடத்தில் நிறுவப்படும் என்பது திட்டவட்டமாக முடிவு செய்யப்படவில்லை என்றும், பெரும்பாலும் காற்றின் வேகமும் இயக்கு சக்தியும் அதிகமாக உள்ள சௌராஷ்டிரத்திலோ, அல்லது சென்னை மாநிலத்திலுள்ள கோயம்புத்தூரிலோ அமைக்கப்படலாம் என்று கருதப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கிராமாந்திர மக்களுக்குக் குறைந்த செலவில் மின்சார வசதி கிடைப்பதற்காக இத்தகைய ஆலைகள் அமைப்பது பற்றிய திட்டங்களில் மத்திய இயற்கை கண்டுபிடிப்பு அமைச்சர் கே. டி. மாளவியா தீவிர கவனம் செலுத்தி வருகிறாராம்.

சௌராஷ்டிரா, பம்பாய் மாநிலத்திலுள்ள பெல்காம், தார்வார் மாவட்டங்கள், சென்னை கோவை மாவட்டம், திரு-கொச்சியின் தென் பகுதிகள், ஒரிசா, உ. பி, பீகார், வங்கம் ஆகியவற்றின் சில பகுதிகள், போன்ற இடங்கள் இத்தகைய ஆலைகளை நிறுவுவதற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவாம்.

காற்றினால் இயக்கப்படும் மேற்படி தொழிற்சாலைகளில் பொருத்தப்படும் காற்றுப்பொறியை இயக்க 6 மைல் வேகம் கொண்ட காற்று போதுமானதாக இருந்தாலும் ஆலையிலிருந்து மின்சார உற்பத்தி செய்வதற்கு மேற்படி காற்றுப் பொறியை இயக்க 15 மைல் வேகக் காற்று தேவை என்றும் நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

5,00,000 ஏகர் பரப்பளவுள்ள நிலத்திற்குப் பாசன வசதி அளிக்க, 1,00,000 காற்றுஆலைகள் தேவைப்படும் என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 20,000 முதல் 30,000 காற்றாலைகளுக்குத்தான் திட்டமிடப்பட்டிருந்தாலும், இன்னும் 10 ஆண்டுகளில்குறிப்பிட்ட 1,00,000 காற்று ஆலைகள் நிர்மாணிக்கப்பட்டுவிடும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கோவை போன்ற காற்றின் வேகம் அதிகமுள்ள இடங்களில் குறைந்தபட்ச செலவுடைய ஒரு காற்று ஆலை, நாளொன்றுக்கு சராசரி 12,000 காலன் தண்ணீர் இறைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் குடி உரிமை பெற்ற அன்னியர்கள்

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு சுமார் 1,500 அன்னிய நாட்டவருக்கு இந்தியக் குடி உரிமை வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்திய அரசியல் சட்டம் ஐந்தாம் பிரிவின்படி, கடந்த 1955 மார்ச்சு திங்கள் முடிய சுமார், 2,851 மனுக்கள் வந்துள்ளன என்று அதிகாரபூர்வமாகத் தெரிகிறது. இவற்றில், 1,526 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்றும், எஞ்சியவற்றில் 136 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டனவென்றும், மிகுதி இன்னும் பரிசீலனையிலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

காந்தீயத்திற்குக் கல்லறை!

'பலாத்காரப் பற்று'க்கு எடுத்துக்காட்டு!

பம்பாயில், போலீசு உடையுடன் பொம்மை ரிவால்வரையும் வைத்துக் கொண்டு ஐந்து வயதுள்ள பையன் ஒருவன் நேருவை ஒரு மலர்ச்செண்டு கொண்டு வரவேற்றானாம்!

பிரமுகர்களுடன் நேரு வந்து கொண்டிருக்கும்போது இப் பையன் வந்தான்.

தலைமையமைச்சர் நேரு பையனைக் கண்டதும் குனிந்து, பையன் அளித்த மலர்ச் செண்டை ஏற்றுக் கொண்டார்.

புதுவை டில்லியுடன் இருப்பதா சென்னையுடன் இணைவதா?

அப்பகுதி மக்கள் கருத்தறிந்தே முடிவு கட்டப்படும் என்கிறார் காமராசர்!

காரைக்கால், ஜூலை 14—

"புதுவை, காரைக்கால் பகுதிகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டியது அப்பகுதிவாழ் மக்களையே சார்ந்தது; சென்னையிலோ அல்லது டெல்லியிலோ உள்ளவர்களின் கவலைக்குரியதல்ல—அப்பிரச்சினை!

"அப்பகுதிகளைப் பற்றி தன்னிஷ்டம்போல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது என்ற எண்ணம் மத்திய அரசாங்கத்திற்கோ, மாநில அரசாங்கத்திற்கோ இருந்திருக்குமானால், எப்போதோ செய்திருக்க முடியும்; ஆனால், இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டியவர்கள் புதுவைப் பகுதி மக்களேயன்றி, வேறு அன்னியப் பகுதி மக்களல்லர்; எனவே, சென்னையுடன் இந்தப் பகுதிகளை காங்கிரஸ்காரர்கள் இணைத்துவிடுவார்கள் என்ற வதந்தியை நம்பத் தேவையில்லை,"

—என்று, சென்னை மாநில முதன் மந்திரி காமராசர், இங்கு தனக்குத் தரப்பட்ட வரவேற்பு ஒன்றுக்குப் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

புதுவை டில்லியுடன் இணைந்திருப்பது பொருளற்றது என்கிறார் கனம் சுப்பிரமணியம்

புதுவை, ஜூலை 14—

"புதுவை, சென்னை மாநிலத்துடன் இணைவதே சிறந்தது; பிரெஞ்சுக்காரர் வசமிருந்த மூன்று இலட்சம் மக்களை மட்டுமே கொண்ட அந்தப் பகுதி, 'சி' பிரிவு மாநிலமாக இயங்க வேண்டுமென்பது அர்த்தமற்றது,"

என்று, இங்கு ஒதியன்சாலையில் நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் பேசிய சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜெர்மானியரை மணந்தார்

இந்தியாவின் சேனாதிபதியான நாகேஷ் என்பவரின் சகோதரி சகுந்தலா, ஜெர்மனியில் ஜெர்மன் கட்டிட எஞ்சினீயரான குடால்ப் ஹார் என்பவரை திருமணம் செய்து கொண்டதாகத் தெரிய வருகிறது.

மேற்கும்-கிழக்கும் சந்திக்கும் இடங்கள்!

"பல்வேறு துறைகளில் வேறுபடும் ரஷ்யர்களும், அமெரிக்கர்களும் சில குறிப்பிட்ட துறைகளில், ஒருமைப்பாடுடையவர்களாகவுமிருக்கின்றனர்,"

என்று, பண்டித நேரு கருத்தறிவித்திருக்கிறார்.

"இரு நாட்டவருமே வந்தாரை வரவென்றழைத்து உபசரிப்பவர்களாக—நட்புணர்வும், திறந்த மனது கொண்டவர்களாக—இயந்திரம் போல் வேலை செய்பவர்களாக—காரியங்களை பெருமளவில் செய்ய வேண்டுமெனும் விருப்பங் கொண்டவர்களாக இருக்கின்றனர்,"

என்று பண்டித நேரு தமது சகா மந்திரிகளிடம் கூறியதாக நம்பப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—22/55

நியமிக்கப்படும் பொதுக்குழு உறுப்பினர்கள்:

கீழ்க்கண்டவர்கள், பொதுச்செயலாளரால் பொதுக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிறார்கள்:—

தோழர் அ. பொன்னம்பலனார்
" காஞ்சி-கல்யாணசுந்தரம்
" ஆர். பாலகுருசாமி (சிதம்பரம்)
" ஒளியழகன் (குன்னூர்)
" கே. ஆர். இராமசாமி
" எம். ஜி. இராமச்சந்திரன்

★

தலைமைச் செயற்குழு:

கீழ்க்கண்டவர்கள் அடங்கிய தலைமைச் செயற்குழு பொதுச்செயலாளரால் அமைக்கப்படுகிறது:—

துணைப் பொதுச்செயலாளர்:
தோழர் என். வி. நடராசன்

செயற்குழு உறுப்பினர்கள்:

தோழர் சி. என். அண்ணாதுரை	தோழர் ஜி. பி. சோமசுந்தரம்
" ஈ. வெ. கி. சம்பத்	" அம்பில் தருமலிங்கம்
" மு. கருணாநிதி	" மதுரை எஸ். முத்து
" கே. ஏ. மதியழகன்	" கே. வி. கே. சாமி
" சி. பி. சிற்றரசு	" வி. எம். ஜான்
" ஏ. வி. பி. ஆசைத்தம்பி	" இரா சாம்பசிவம்
தோழியர் சத்தியவாணிமுத்து	" சி. வி. எம் அண்ணாமலை
தோழர் கே. கே. நீலமேகம்	

"அறிவகம்,"
சென்னை
15-7-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சர்வதேசத் தொண்டர் படை

வருகிற அக்டோபரில் சர்வதேசத் தொண்டர் படை ஒன்று கோவாவிற்குள் நுழையுமாம்!

ஜப்பான், இஸ்ரேல், இந்தோனேஷியா, ஆப்பிரிக்கா, சோஷலிச இயக்கம் இருந்துவரும் மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த சோஷலிச இயக்க இளைஞர்கள் மேற்படி போராட்டத்தில் கலந்து கொள்ள இருப்பதாக அறிவித்திருக்கிறார்.

1954—55-ம் ஆண்டில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான புகையிலையின் மொத்த மதிப்பு ரூ. 11 கோடி.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 15—7—'55 வெள்ளி

உலக்கை வருகிறது! உஷார்!

'நிலக்கரி கிடையாது; பெரும் முதலாளிகள் இல்லை; எனவே தென்னகத்தைத் தொழில் மயமாக்க முடியவில்லை'—இந்தியப் பேரரசின் வர்த்தக-உருக்குத் தொழில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் முற்றிய அறிவியல் முடிவு, இது!

மேற்குறிப்பிட்ட இரண்டு வசதிகளையும் பெற்றில்லாத நாடு, என்றென்றும் வெறும் விவசாயநாடாகத்தான் இருந்துதீர வேண்டுமென்பது, டி. டி. கே. யின் பிடிவாதம்!

தொழில் துறையில், தென்னகம், இந்தியப் பேரரசால் அலட்சியப்படுத்தப்பட்டு வருவதற்கு, தென்னகத்தைச் சேர்ந்தவரான அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியாரின் அரிய அறிவுரைதான் காரணமோ என்றுகூட நாம் எண்ண வேண்டியவர்களாக உள்ளோம்.

அவர்மீது நாம்கொண்டுள்ள ஐயப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையிலேயே, இந்தியப் பேரரசின் ஒவ்வொரு செயல் முறையும் இருந்து வருகிறது.

தென்னகத்தை விவசாய நாடாக, வறுமையிலும் பற்றுக்குறையிலும் வைத்திருப்பதோடு மட்டும் இந்தியப் பேரரசு திருப்தி கொள்வதாகக் காணோம். மேலும் தென்னகத்தை பொருளாதாரத் துறையில், ஓங்கவிடாமல் பார்த்துக் கொள்வதிலேயே, இந்தியப் பேரரசிற்கு ஆர்வம் இருக்கிறதாகவே தெரிய வருகிறது.

பொருளாதார வளத்தை மட்டந் தட்டிவிட வேண்டும் எனக் கங்கணங் கட்டிக் கொண்டிருப்பதுடன் மட்டுமின்றி, இருக்கும் குறைந்த வளத்திற்குரிய வசதிகளையும் பறித்துக் கொள்ளவும் இந்தியப் பேரரசு முயற்சிக்கிறது என்றே நாம் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இயந்திரத்தில் அரைக்கப்படும் அரிசியில், உயிர்ச்சத்து ஒழிந்து விடுகிறதாம்; கைக்குத்தல் அரிசியில் அச்சத்து அரிசியுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறதாம். எனவே, கைக்குத்தலுக்குப் பாதுகாப்பு அளித்து வளர்க்க, இயந்திரங்களுக்குத் தடை விதிக்க வேண்டுமாம்!

அரிசி அரைக்கும் இயந்திரங்களை மெள்ள மெள்ள இல்லாமல் செய்துவிடுவதின் மூலம், கைக்குத்தல் ஏற்பாடு, ஒரு குடிசைத் தொழிலாக வளருவதற்கு வசதி பெறும். அதனால் கிராம மக்களிடம் இன்று இருந்து வரும் வேலையின்மைக் கொடுமையை அறவே ஒழித்துவிட முடியுமாம்!

மேற்குறிப்பிட்ட இரண்டு கோட்பாடுகளும் செயலாற்றப்படுமானால், உயிர்ச் சத்து நீங்காத அரிசி மக்களுக்குக் கிடைப்பதும், அதே காலத்தில் கிராமங்களில் வேலையின்றித் தவித்துக் கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வாழ வகைகிடைப்பதும் சாத்தியமாகும்.

இப்படி ஒரு, சிறந்த பொருளாதார ஏற்பாட்டை சிபாரிசு செய்திருக்கிறது, இதற்கெனவே இந்தியப் பேரரசால் நியமிக்கப்பட்ட அரிசி ஆலை ஒழிப்புக் குழு!

இயந்திர சாதனங்கள் கண்டு பிடிப்பதற்குமுன், தான் உயிரோடு வாழ்வதற்கு, மாடு போல்தான் மனிதன் உழைக்க வேண்டியதாக இருந்து வந்தது.

இயந்திரம், மனிதனை மாட்டு நிலையிலிருந்து மீட்டு, நல்வாழ்வு பெறுவதற்கு பெருந்துணை புரிந்தது—புரிந்தும் வருகிறது.

அதுவுமன்றி, மனிதனுடைய தொழில் ஆற்றலை, இயந்திர பலமடங்கு பெருக்கினதுடன், அதற்கொப்ப பலனையும் பலமடங்குக் கூட்டப் பயன்பட்டு வருகிறது.

அதாவது, மனிதனுடைய உழைப்பைக் குறைக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும், சுகவாழ்வை சுவையுள்ளதாக ஆக்கவும் இயந்திரம் பயன் பட்டுவருகிறது.

கைக்குத்தல் அரிசி எனும் குடிசைத் தொழில், மீண்டும் மனிதனை மிருக நிலைக்குக் கொண்டு செல்வதாகும்!

மிருகம்போல் உழைக்க முனைந்தாலும், உலக்கைத் தொழிலில், தேவையான அளவு பலன் ஒருவரால் பெற முடியாது.

உலக்கை கொண்டு நெல் குத்துவதற்கு, அத்தொழிலை மேற்கொள்ளும் ஒருவனுக்கு, மற்ற கடினமான உடலுழைப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேவைப்படுவதைக் காட்டிலும் உடலில் தெம்பு இருந்தாக வேண்டும். அவ்வதிகப்படியான பலத்தை, உலக்கைத் தொழில் மூலம் ஒருவனுக்குக் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு பெற முடியாது.

இப்பொழுது வேலை கிடைக்காது பட்டினியாகக் கிடப்பதைப்போல்தான், அப்பொழுதும் உலக்கையேந்திய கரங்களுடன், ஒருவன் பட்டினியாகக் கிடக்கும் நிலை நீடித்து இருந்துவரும்.

இது ஒரு பக்கம் இருக்க, மாடுபோல் உழைக்க வேண்டிய உலக்கையை, மீண்டும் கிராம மக்களை ஏந்தச் செய்வது என்பது, சட்டத்தாலும் முடியாது; திறமையான பிரசாரத்தாலும் முடியாது.

உலக்கையின் சிறப்பு பற்றி அவர்களிடம் பேசப் போகும் அரசாங்க அதிகாரிகளை, கிராம மக்கள் இலேசிலே விடமாட்டார்கள். கேள்வி மேல் கேள்விபோட்டுத் திணறடித்து விடுவார்கள்!

உலக்கையை விநியோகிக்க, கிராமத்திற்குச் செல்லும் காங்கிரஸ் ஆளவந்தார்களை, கிராமத்து மக்கள் என்ன கேட்பார்கள் தெரியுமா?

"உங்களுக்கு வாக்களித்த பாபத்திற்கு, எங்கள் கரங்களில் உலக்கையை மட்டுமா கொடுக்க வருவீர்கள், எங்கள் வீடு புகுந்து தகாத முறையில் நடந்துகொள்ளக்கூடத் துணிவீர்களே?" எனக் கேட்பர்—சாதாரணமாக அல்ல—வீட்டுப் படைகளை ஏந்திய வண்ணம்!

நெல் உற்பத்தியில் முதலிடத்தில் இருந்து வருவது திராவிடமேயாகும். நெல் அரைக்கும் இயந்திர சாதனங்கள்தான் இங்கு 'ஆலைகள்' எனும் சிறப்புப் பெயரையும் பெற்று விளங்குகிறது; அதற்கும் உலை வைக்க, அரசாங்கம அமைத்த குழு, சிபாரிசு செய்கிறது!

உலக்கைத் தொழிலில் ஒருவனுக்குக் கிடைக்கும் ஊதியம், அவனுடைய வயிற்றை நிரப்புவதற்கே போதியதாக இருக்காது. வயிற்றை நிரப்புவதற்கே முடியாத வருமானத்தைப் பெற்று வரும் ஒருவனிடம், வேறு பொருட்களை வாங்குவதற்கான 'வாங்கும் சக்தி' எப்படி இருக்க முடியும்? 'வாங்கும சக்தி'யே இல்லாத ஒருவனிடம், 'மிச்சம' இருக்க முடியுமா? 'மிச்சம் பெருகாதவர்களைக் கொண்ட நாட்டில், தொழில் நிர்மாணிப்பதற்கான 'மூலதனம்' திரளுவது எங்கே?

மூலதனம் கிடைக்கப் பெறாத நாட்டைத் தொழில் மயமாக்குவது முடியாது என்ற டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் அற்புத சித்தாந்தத்திற்குத்தான் நாம வந்து சேர வேண்டும்.

உலக்கைத் தொழில் ஏற்பாட்டை சிபாரிசு செய்த குழுவில் உள்ள உறுப்பினர்களின் பெயர்களைப் பார்த்தாலே போதும், உலக்கைத் தொழில் தென்னகத்திற்கென்றே ஆராய்ந்து கூறப்பட்ட ஒரு சண்டாளத்தனம் என்பதை விளங்கிக்கொள்ளலாம்.

ஐ. யூ. லாக்கியா, ஜவேரி பாய் பட்டேல், திருமதி பி. ஜேகாரி, டாக்டர் டி. வி. கர்மார்க்கர், என். எம், பர்தான், ஜி. பரமேசுவரன் ஆகிய, உலக்கை உடலுழைப்பில் உள்ள கடுமையையும் கொடுமையையும் அனுபவ மூலமாக அறிந்திராதவர்கள் தான், உலக்கைத் தொழிலில் உள்ள உச்சத்தை விண்முட்ட சிறப்பித்துக் கூறுகின்றனர்.

இப்பெயர்களைப் படித்ததும், 'உலக்கை வருகிறது! உஷார்!' என, நம்மவரை எச்சரிக்காமல் எப்படி இருப்பது? அது, நமமவருக்குச் செய்யும் துரோகமாகவல்லவோ முடியும்?

தென்னாட்டு கோரிக்கை புறக்கணிப்பு?

இந்தி கொள்கையில் மத்திய ஆட்சியினர் பிடிவாதம்?

இந்தியை அரசாங்க மொழியாக்குவதில், அரசியலமைப்புச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள 15 - ஆண்டு காலத்திற்கு மேல் அதை நீடிக்க மத்திய ஆட்சி பீடம் சம்மதிக்காது என்று தெரியவருகிறதாம்!

ஆய்வுக் குழுக்களின் சிபார்சுகள் வெளியிடப்படும்வரையில், இது சம்பந்தமாக ஆட்சியினர் அறிக்கை வெளியாவதற்கு சிறிது காலதாமதம் ஏற்படலாமென்றாலும், அக்குழுக்களின் கருத்தும் ஏறக்குறைய இதுபோன்றே இருக்குமென்றும் நம்பப்படுகிறதாம்.

அமுலாக்கும் காலத்தை மேலும் நீடிக்க வேண்டுமென்ற தென்னாட்டின் கோரிக்கையை இந்திக் குழு தலைவரும் ஆதரிக்கவில்லையாம்!

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் பிளவு

நேருவை ஆதரிப்பதில் கோஷ்டிப் பிரிவினை

புதிய கட்டளைக்காக தலைவர்களின் மாஸ்கோ பயணம்

இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்குள்ளாகவே கருத்து வேற்றுமை தீவிரமாகிக் கொண்டு வருகிறது.

அக்கட்சியில் ஒரு சாரார், இந்தியப் பேரரசு கடைபிடித்து வரும் வெளிநாட்டுக் கொள்கையையும், வேறு சில உள்நாட்டு நடவடிக்கைகளையும் ஆதரிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

நேருவின் நடைமுறைகளை எதிர்த்து நிற்பதின் மூலம் தங்கள் கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்ற முன்னுள் நோக்கத்திலேயே நம்பிக்கை வைத்துள்ளனர் மற்றொரு சாரார்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் செயல் நிர்ணயக் குழு, கட்சியின் 'அரசியல் செயல் முறை'யை வகுத்த பின்னர், உடல் நலம் காரணமாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் அஜாய் கோஷ் மாஸ்கோ செல்வது, அக்கட்சியினரிடை பற்பல யூகங்களுக்கு இடமளிக்கிறது. அவர் பயணம், உலகக் கம்யூனிசக் கோட்பாட்டில், கம்யூனிஸ்டு கட்சியினருக்குள்ளாகவே ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையை அகற்றி, மீண்டும் புத்தார்வத்தைத் தரக்கூடும் என நம்பப்படுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் செயல் நிர்ணயக் குழு சென்ற மாதத்தில் கூடி இருக்கும் பொழுதே, உலக தொழிற் சங்க சம்மேளனக் கூட்டத்தில் பங்கு கொள்வதற்காக, ஐரோப்பா சென்றுள்ள, முக்கிய குழு உறுப்பினர்களான எ. டாங்கேயும், பி. இராமமூர்த்தி ஐயரும், கூடிய விரைவில் மாஸ்கோவில் இருக்கப் போகின்றனர். மற்றொரு முக்கிய உறுப்பினரான பஞ்சாப்வாசி சுர்ஜீத்தும் அனேகமாக மாஸ்கோ செல்லக் கூடும்.

கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு சென்றமுறை கூடினதற்கு முன்பிருந்தே, காங்கிரஸ் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் வகையில் கட்சியின் போக்கைத் திருத்தி அமைக்க பி.சி.ஜோஷி தலைமையில் சிலர் முயன்றனர். இம்முயற்சிக்கு பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு தலைவர்களான ஹரி போலிட்டும், பாமிதத்தும் பெரிதும் ஆதரித்தனர்.

ஸ்டாலின் இறப்புடன், மற்ற கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு வழி காட்டும் ஆற்றல் சோவியத் கம்யூனிஸ்டு கட்சிக்கு இல்லாமல் மறைந்துவிட்டது என்றும், இந்தியா உள்பட காமன்வெல்த் நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டு கட்சிகளை நடத்திச்செல்லும் உரிமை பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு கட்சிக்கே உரித்தாகும் என, மேற்குறிப்பிட்ட பிரிட்டிஷ் தலைவர்கள் மனப்பூர்வமாக நம்புகின்றனர்.

மதுரையில் கூடிய கம்யூனிஸ்டு கட்சியின் மாநாட்டின்போதேகூட, காங்கிரசுடன் ஒத்துழைக்கும் கருத்தை ஒப்புக்கொள்ளும்படி அஜாய் கோஷை, ஹரி போலிட் வற்புறுத்தினார். அவருக்கு வெற்றி கிட்டவில்லை.

இத்தோல்விக்கு எ. டாங்கேயே காரணமாகும். அவர் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு தலைவர்களின் தலைமையை ஏற்றுக்கொள்ளுவதில் அவருக்கு எப்பொழுதும் விருப்பம் கிடையாது. இந்திய கம்யூனிஸ்டு கட்சி கம்யூனிஸ்டு அகிலத்துடன் தொடர்பு கொண்டிருப்பதே நன்மையானது என்பது, டாங்கேயின் கருத்தாகும்.

அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ள கட்சியின் அரசியல் தீர்மானம், கட்சிக்குள்ளாக இருந்து வரும் மூன்று கட்சிகளையும் திருப்திபடுத்தக்கூடிய ஒரு ஏற்பாடு என வியாக்கியானம் செய்யப்படுகிறது. சோவியத் நடைமுறையில் எத்தகைய மாறுதல் ஏற்படுத்தப்பட்டபோதிலும், அரசாங்கத்தை வீழ்த்துவதுதான், அகில உலக கம்யூனிஸ்டு கட்சி நலத்துக்கு ஆக்கம் தருவதாகும் என்று நம்புவதின் காரணமாக, அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியைத் தொடர வேண்டும் என ஆந்திர கோஷ்டி விரும்புகிறது.

ஜோஷியின் சொல்முறையை கிட்டத்தட்ட ஒத்திருக்கும் ஒரு செயல் முறையை இப்பொழுது டாங்கே உருவாக்கி இருக்கிறார். தன்னுடையதுதான் அகில உலக செயல்முறை எனக் கட்சிக்குக் கூற, தனது ஏற்பாட்டிற்கு ரஷ்யத் தலைவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றாக வேண்டும் என டாங்கே விரும்புகிறார்!

அஜாய் கோஷோ, இரண்டிலும் சேராத ஒரு நடுவழியைக் கடைப்பிடிக்க விரும்புகிறார்!

பாகிஸ்தான் நடவடிக்கையால்...

ஆப்கன் வர்த்தகத்தில் நெருக்கடி

ரூ. 1 கோடி பெறுமானமுள்ள பொருட்கள் தேக்கம்

ஆப்கன் நாட்டுடன் வர்த்தகம் நடத்துவதில் மிகுந்த நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளதால், சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்ப 50 விமானங்களை ஒதுக்கவேண்டும் என்று பம்பாய் இந்தோ-ஆப்கன் வர்த்தகர் சங்கம் இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டுள்ளதாம்.

வழக்கம்போல் பாகிஸ்தான் வழியாக ஆப்கனுக்கு நடைபெற்று வந்த போக்குவரத்துப் பாதைகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டதால், ஆப்கன் நாட்டிற்கு சாமான்கள் அனுப்புவதும், அங்கிருந்து சாமான்களை எடுத்துவரவும் கஷ்டமாக இருப்பதாக அச்சங்கம் தெரிவித்திருக்கிறது.

ஆப்கனுக்கு வெளியிடங்களிலிருந்து போகவேண்டிய பொருட்களும், அங்கிருந்து வெளியிடங்களுக்கு வரவேண்டிய பொருட்களும் அங்கங்கே தேங்கிக் கிடப்பதால் இரு நாடுகளிலும் மேற்படி பண்டங்களின் விலை படிப்படியாக அதிகரித்து வருகிறதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது பாகிஸ்தானில் இதன் விளைவாக ரூ. 1 கோடி பெறுமான முள்ள பொருட்கள் தேங்கிக் கிடக்கின்றனவாம்.

கராச்சி வழி வர்த்தகத்தை ஆப்கன் நிறுத்தியது

ஜப்பானிலிருந்து, ஆப்கானிஸ்தானத்திற்குவரும் பொருட்களை, கராச்சித் துறைமுகத்தில் இறக்குவதற்குப் பதிலாக பம்பாய் துறைமுகத்திலேயே இறக்கிவிடுமாறு ஆப்கன் வர்த்தகர்கள் கப்பல் கம்பெனிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனராம்.

இதுவரையிலும், கராச்சியில் இறக்குமதியாகும்: பொருட்களில் 40 சதவிகிதம் ஆப்கானிஸ்தானுக்குப்போகக் கூடியவைகளாக இருப்பது வழக்கம்; இந்தத் தொகை தற்போது 10 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுவிட்டது

ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல நான்கு ஆண்டு காலத்தில் பூர்த்தியான பலவேறு பாசன வேலைத் திட்டங்களின் பயனாக புதிதாகப் பாசன வசதி பெற்றுள்ள நிலங்களின் மொத்த பரப்பளவு 4.9 லட்சம்.

‘தமிழர்களைப் பண்பாடு அற்றவர்கள் என்றே கருதுகிறர்கள்’

‘தமிழை ‘காக்கை-குருவி பேசுகின்ற பேச்சு’ என்றே கருதுகின்றனர்’

‘இகழ்ச்சிக்கும் ஏளனத்திற்கும் உட்பட்டு டில்லியில் தமிழர்கள் வாழ்கின்றனர்’

‘மற்ற மாநிலத்தவர் தமிழகத்தில் இழிந்த வாழ்வு நடத்துகின்றனரா?’

ஒற்றுமை பேசி வந்த தமிழர் உடைந்த உள்ளத்துடன் பேசுகிருர்!

“டில்லியில் உள்ளவர்கள் தமிழர்களை ‘பண்பாடு’ அற்றவர்கள் என்றே கருதுகிருர்கள். நெருங்கிப் பழகுகின்றுழி, அதனைப் பேச்சில் வெளியிடவும் செய்கின்றனர்; தமிழை, ‘காக்கை, குருவி பேசுகின்ற பேச்சு,’ என்றே கருதுகின்றனர்.

“அனைத்திந்திய ஒற்றுமையைக் காண்பதிலும், பேசுவதிலும் எனக்கு எவ்வளவோ பற்றுதலும், ஆர்வமும் உண்டு; ஆனல், உண்மையிலேயே கூறுகின்றேன்—நான் இங்கு வந்த ஓராண்டு காலத்துக்குள் என் மனம் எவ்வளவோ உடைந்துவிட்டது.

“யாரையும் குறை கூறுவதில் பயனில்லை. சீரோடு வாழ்ந்த இனம்—தன் மதிப்போடு வாழ்ந்த இனம்—தனக்கேயுரித்தான பண்பாட்டோடு வாழ்ந்த இனம்—தன் ஆற்றலையும், வல்லமையையும் மற்ற நாட்டவரோடு காட்டுதலை இழந்து, தன் இனத்துக்குள்ளேயே வேற்றுமை காட்டி விறுகச் சீர்கேடு அடைகின்றதை எண்ணி, அல்லலுறுகின்றவர்களாக நாம் அமைகின்றோம்.

“கணக்கற்ற தமிழர்கள் பிச்சை எடுக்கின்றனர்; இழிந்த வாழ்வு நடத்துகின்றனர்; மோட்டார் நிலையங்களில் தமிழ் நாட்டில் என்ன காண்கின்றோமோ அதை டில்லியிலும் காணலாம். உடலை விற்கும் தொழிலையும் தமிழ் நாட்டிலிருந்து போந்த தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்கள் செய்கின்றனர்; பரத்தையர் இல்லங்களிலும் தமிழ் பேசுகின்ற பெண்களைக் காணலாம். யாரை நோவது? தமிழ்நாட்டுச் சிறுமியர், சிறுவர்கள் எல்லோரும் பிச்சை எடுக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் மூலநோய் வறுமை என்பது சொல்லாமலே விளங்கும்,”

—என்று, டில்லியிலிருந்து, தோழர் மு ந.சிவாயம் என்பவர், 12-7-55 ‘தமிழ் நாடு’ இதழின் அஞ்சல் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

அப்பகுதியில், மேலும் அவர் குறிப்பிடுவதாவது :—

“இங்கு இகழ்ச்சிக்கும், ஏளனத்துக்கும் உட்பட்டுத் தமிழர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. பிறந்த இடத்தில் வாழவகையின்றி, ‘வட நாடு தான் கதி’ என்று வந்தவர்களுக்கு இதைப் பொறுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை.

“மற்ற மாநிலத்தவர்கள், நம் தமிழகத்தில் இந்த இழிந்த வாழ்வு நடத்துகின்றனரா? நடத்தவேண்டிய நிலைமையுளதா?—கூறுங்கள் அதிகம் எடுத்துக்கூற எனக்கு விருப்பமில்லை. உண்மையில், மாநிலப்பித்து அற்றவன் தமிழன்; மற்ற மாநிலத்தவர்களோடு பழக நேருமபொழுது, அவர்களுடைய இரண்டகச் செயல்களைக் கண்டு மனம் பொறுது மாறுகின்றுன். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று பாடிய இனத்தின் கால் வழியில் வருகின்றவனுக்கா உலக ஒற்றுமையைப் பற்றிச் சொல்லிக் கொடுக்க வேண்டும்?

“எவ்வளவோ கூறலாம் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.”

ஈரான் மன்னரும் ரஷ்யா செல்கிருர்!

ஈரான் மன்னர் தமக்கு விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டு ரஷ்யாவுக்கு வருகை தரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எப்போது ரஷ்யா செல்வார் என்பது நிச்சயமாக்கப்பட்டவில்லையாம்!

1954—55-ம் ஆண்டில் பருத்தி சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் மொத்த பரப்பளவு 1,83,46,000 ஏக்ர் (ஐந்தாண்டுத் திட்ட லட்சிய அளவு 180 லட்சம் ஏகராவே யாகும்)

பெங்களூரில் பொதுச்செயலாளர்

கலந்துகொள்ளும் நிகழ்ச்சி நிரல்

★

17—7—55 ஞாயிறு

காலை 7-30 மணி: புகைவண்டி நிலையத்தில் வரவேற்பு.

10 மணி: மாவட்டக் கிளை தேர்தல்.

11 மணி: உறுப்பினர் கூட்டம்.

மாலை 4 மணி: சீராமபுரத்திலிருந்து ஊர்வலம்.

6-30: சிக்கலால் பார்க்கில் வரவேற்புப் பொதுக் கூட்டம்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. (கிளைக்) கழகச் செயலாளர்கட்கு!

ஒரு வேண்டுகோள்

“3—6—55ல், நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயற்குழு முடிவு செய்த தற்கிணங்க, சில கிளைக் கழகச் செயலாளர்கள் பாராட்டத்தகுந்த முறையில், தங்கள் தங்கள் கழகச் சார்பில் மாநில மாநாட்டுக்கு நிதி சேர்த்து, மாவட்டக் கழகப் பொருளாளரிடம் சேர்த்து விட்டு, எனக்கு விவரமும் தெரிவித்தனர். மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்;

“மீண்டும்மீண்டும் பல அறிக்கைகள் அனுப்பியும் இதுவரை தங்கள் கிளைக் கழகங்கள் சார்பில் சேர்த்த தொகையை எமக்கு அனுப்பாமல் சிலர் இருப்பது வருந்தத்தக்கது; கடமை—கண்ணியம் — கட்டுப்பாடு இவைகளை மனதில் கொண்டு, உடனடியாகத் தங்கள் பங்குத் தொகையை, ‘நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் கே. சுப்பிரமணியம், சொர்ணகிரி தெரு, கோட்டாறு’ என்ற முகவரிக்கு அனுப்பும்படி, இதுவரையிலும் நிதி அனுப்பாத கிளைக் கழகச் செயலாளர்களை கேட்டுக் கொள்ளுகிறேன்;

“ஜூலை மாத இறுதியில் நாகர்கோவிலில் புதுக்கோட்டை தோழியர் பி. எஸ். செல்வா குழுவினரின் இசை விருந்து வைத்து, அதன் மூலம் நன்கொடை வசூல் செய்யவேண்டும்; இடம், காலம் பின்னல் அறிவிக்கப்படும்; கிளைக் கழகத் தோழர்கள் மேற்படி நிகழ்ச்சி வெற்றி பெறுவதற்கு ஆதரவு நல்க வேண்டுகிறேன்;

ஆகஸ்டு மாதத்தில், தி. மு. கழக மாநில மாநாட்டுப் பொருளாளர் அண்ணு அவர்களை நம் நகருக்கு வருவித்து, நமது மாவட்டம், மாநில மாநாட்டிற்குக் கொடுக்க வேண்டிய கோட்டா தொகை ரூ. 2,000-யும் அவரிடம் நேரில் கொடுக்க முடிவு செய்யப் பட்டிருக்கிறது; எனவே, கிளைக் கழகச் செயலாளர்களும், கழகத் தோழர்களும், பொதுமக்களும், கழக அனுதாபிகளும் எமது விருப்பத்தை நிறைவேற்றிவைக்க பணிவன்புடன் வேண்டப்படுகிருர்கள்,”

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் வி. எம். ஜான் அறிவிக்கிருர்.

ஆசிரியருக்குக் கடிதம் :

கேரளத்தில் தி. மு. கழகக் குரல்!

ஆசிரியர் : ‘நம் நாடு’

ஐயா,

‘திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டில்தான் உள்ளது; அதன் பிரச்சாரமும் தமிழ் நாட்டில்தான் உள்ளது; ஆந்திரத்திலும், கேரளத்திலும் கிடையாது,’ என்று மாற்றுக் கட்சியினர் கூறி வருகின்றனர்; அந்தக் கூற்று தவறு; கேரளத்துக்காரர்களும் அந்தக் குரலை எழுப்புகிருர்கள் என்பதை நாம் நாட்டிற்குக் காட்ட வேண்டும் என்பதற்காக, நாங்கள் கடந்த ஓராண்டு காலமாகப் பணியாற்றி வருகின்றோம்.

எங்கள் ஊர் (குத்தாம்பள்ளி) திரு-கொச்சி ஆட்சியில் உள்ள மலையாளப் பகுதி; அனைவரும் மலையாளிகளேயாவர்; முதலில் ‘முற்போக்குக் கழகம்’ என்று (மலையாளத்தில்) துவக்கினோம்; நடவடிக்கைகள் அனைத்தையும் மலையாளத்தில்தான் நடத்தி வருகின்றோம்; தி. மு. கழகக் கொள்கைகளைத்தான் பரப்பி வந்தோம்; முதலில் எதிர்ப்பு இருந்தாலும் பின்பு சரியாகிவிட்டது;

அதன் பின்னர், தி. மு. கழகம் என்ன என்பதைப் பற்றி நம் நாட்டு மக்கள் நன்ருகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற அவா கொண்டு, தோழர் கோவை செழியன் அவர்களை அழைத்தோம்; 4—7—55ல், குத்தாம்பள்ளியில் பொதுக் கூட்டம் கூட்டினோம்; சுற்றுவட்டாரங்களில் உள்ள மலையாளத் தோழர்கள் ஏராளமாகக் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

தோழர் கோவை-செழியன் அவர்கள் பேசும்போது, இந்த மலையாளப் பகுதியில் கழகம் ஏற்படுத்தியது குறித்து மகிழ்ந்தும், திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய விதத்தையும், திராவிட கழகம்—ஜஸ்டிஸ் கட்சி—சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றின் முழு வரலாற்றையும், டாக்டர் நாயர், பெரியார், பானகல் அரசர் ஆகியோரின் பணியையும், வைக்கம் போராட்டத்தையும் பற்றிக் குறிப்பிட்டார்; சமுதாயத் தாழ்வுகளையும், அதற்கு அடிப்படையாயுள்ள ஆரியரின் ஆட்சியையும் குறிப்பிட்டார்; பின்பு திராவிட நாடு பிரிக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும், வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டலையும், ஐந்தாண்டுத் திட்டத்தில் காட்டிய ஓரவஞ்சனைகளையும் கூறி, தி. மு. கழகக் கிளைகள் மலையாளப் பகுதிகளில் ஏராளமாக அமைக்கவேண்டும் என்று கேட்டுகொண்டார்.

பின்னர் சொற்பொழிவாற்றிய தோழர் எம். வரதராசன் அவர்கள், மிகவும் உணர்ச்சியோடு, நாட்டில் நடமாடிக் கொண்டிருக்கும் ‘ஆரியக் குள்ள நரிக’ளின் சூழ்ச்சிகளையும், விஞ்ஞானம் உலகுக்கு அளித்த உதவிகளையும் மிகத்தெளிவாகப் பேசியது மட்டுமல்லாமல், தோழர் கோவை-செழியனின் பேச்சுக்களை மிகவும் உணர்ச்சியோடு மலையாள மொழியில் விளக்கினர். கூட்டத்தில் தோழர்கள் எம். இராமசாமி, அ. கதிரி ஆகியோர் பேசினர்.

பக்கத்துப் பகுதியிலுள்ள மலையாளிகள், கழகத்தின் குறிக்கோளின் உண்மைகளை அறிந்து, கழகத்தைத் தங்கள் பகுதிகளிலும் அமைக்கப் போவதாக உறுதி கூறியுள்ளனர்.

அடூர். எம். இராமசாமி,
பொருளாளர், முற்போக்கு கழகம்,
குத்தாம்பள்ளி.

புதுவையின் வருங்காலம்

“மக்களின் விருப்பத்தை ஒட்டியே புதுவையின் வருங்காலம் இருக்கும்; அவர்கள் நலனைப் பாதிக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள இயலாது,”

என்று, நிதிமந்திரி சுப்பிரமணியம் தேர்தல் கூட்டமொன்றில் பேசுகையில் வாக்குறுதி தந்தாராம்.

எதிர்தரப்பு தலைவர்கள் சிறையிடப்பட்டனர்

போர்ச்சுகல்லில் உள்ள பிரபல கணித வல்லுநரும், சென்ற தேர்தலில் டெமாகிரடிக் கட்சியின் சார்பில் தலைமைப் பதவிக்கு போட்டியிட்ட வருமான டாக்டர் ரீ லூயிஸ் கோம்ஸ் என்பவர், ஆபர்டோவில், போர்ச்சுகல் விசேட இராணுவ நீதி மன்றத்தால் 18 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிருர் எனக் கூறப்படுகிறது.

கோவா பிரச்சினை சம்பந்தமாக, டாக்டர் சலாசர், இந்திய சர்க்காருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டுமென பத்திரிகைக் குறிப்பொன்று வெளியிட்டதாக அவர் மீது குற்றஞ் சாட்டப் பட்டது.

இதே குற்றத்திற்காக, இவரைத் தொடர்ந்து மற்றும் 4 தலைவர்களும் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஒரு எஞ்சினீயரான திருமதி விர்ஜினியா மோராவும், அவரது கணவர் அந்தோனியோ லாகோவைடல் என்பவரும், மற்றும் இருவரும்—முறையே 18,9,19,19 - மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளனராம்.

* * *

ஓராண்டில் கோவாவில் கைதானேர் எண்ணிக்கை

கோவா விடுதலைப் போரில், 1954 பிப்ரவரியிலிருந்து கடந்த ஏப்ரல் வரையில் 2,560 பேரை போர்ச்சுகீசிய அதிகாரிகள் கைது செய்தனராம்; விடுதலையானவர்களைத் தவிர்த்து, இன்னும் 510 - பேர் சிறையிலுள்ளனராம்; இதில் 15 பேர் பெண்களாம்.

ஹிராகுட் அணைத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் பாசன வசதியின் பலனுக, 45 லட்சம் மணங்கு உணவுத் தானியங்கள் உற்பத்தியாகுமென்று மதிப்பிடப்படுகிறது.

தி. மு. கழக ஊழியரைத் தாக்கியதின் எதிரொலி

கம்யூனிஸ்டு தோழர்கள் கைது

இராஜபாளையம், ஜூலை 11—

11—7—55 மாலை, இந்நகர் தி. மு. கழக ஊழியர் தோழர் தங்கம் அவர்கள், இரயில்வே நிலையத்திற்குக் கீழ்ப்புறம் உலவிவிட்டுதிரும்பிவருகையில், இரயில்வே லைனில், இராகவ ராஜா, இராமைய ராஜா, ஜெயராம் ராஜா என்ற கம்யூனிஸ்டு தோழர்களால் தாக்கப்பட்டார். இரயில்வே நிலையத்திலிருந்த ஸ்டேஷன்மாஸ்டர், பாய்ண்ட்ஸ் மேன் ஆகியவர்களால், தாக்கியவர்களில் இருவர் பிடிக்கப்பட்டு போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அவர்களை ஜாமீனில், விடுவிக்க போலீசார் மறுத்துவிட்டபடியால் அன்று முழுவதும் காவலில் வைக்கப்பட்டு, மறுநாள் ஸ்ரீவில்லிபுத்தூர் சப்-ஜெயிலுக்கு அனுப்பப்பட்டனர்.

தாக்கிய தோழர்களில் ஒருவரான ஜெயராம ராஜா தலைமறைவாக இருக்கிருர். (ந—நி)

புதிய கையொப்பமிட்ட ரூ. 1 நோட்டுகள்

சில மாறுதல்களே இருக்கும்

மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் காரியாலயத்தின் முன்னுள் செயலாளரான கே. ஜி. அம்பேகாவ்கரின் கையொப்பத்திற்குப் பதிலாக இனிமேல், தற்போதைய செயலாளரான எச். எம். பட்டேல் கையொப்பமிட்ட இந்திய சர்க்காரின் ஒரு ரூபாய் மதிப்புள்ள நோட்டுகள் விரைவில் செலாவணிக்கு வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புதிய முறையில் வெளிவரும் நோட்டுகளின் பின்புறத்தில், இந்திய மொழிகளில் நோட்டின் மதிப்பு குறிக்கப்பட்டிருக்கும் விதத்தில் சில மாறுதல்கள் இருக்குமேயன்றி மற்றப்படி முன்னைய நோட்டுக்கும், இப்புதிய நோட்டுக்கும் வேறு வித்தியாசமேதும் கிடையாதென்றும், கே. ஜி. அம்பேகாவ்கரின் கையொப்பமும், அதற்கு முந்தியவர்களின் கையொப்பமுமிடப்பட்டுள்ள நோட்டுகளும் செல்லுபடியாகுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

‘அழிவுத் துறை’யும் ‘அறிவுத் துறை’யும்

ஜெனீவா, ஜூலை 14—

“தற்போது ஆயுதங்களுக்காகச் செலவிடப்படும் தொகையில் ஒரு பகுதியை கல்வித் துறைக்கு ஒதுக்க வேண்டும்.”

என்று, கல்வி பற்றிய சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்துகொண்ட 65 நாடுகளின் பிரதிநிதிகள் அறிவித்திருக்கின்றனர்.

யுத்தங்கள் ஏற்படுவதால் நாடு நாசமடையுமே தவிர வேறு நன்மையில்லையென்றும், ஆனல் கல்வி பெருக்கப்பட்டாலோ செல்வமும் கூடவே பெருகும் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

உறுப்புகளை இழந்த குழந்தைகளுக்கான கல்வியிலும் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்றும், நடுநிலைப் பள்ளி கல்வி அபிவிருத்திக்கு அதிகத் தொகை செலவிடப்பட வேண்டும் என்றும் மேற்படி மாநாட்டில் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இயந்திர மனப்பாங்குடன் சோவியத் சிறுர்கள் உள்ளனராம்!

ரஷ்யத் தொழிலாளர் நிலைகண்டு நேருவின் பெருமிதம்!

நிர்வாகி—தொழிலாளி யாரெனக் காண இயலவில்லையாம்!

"ரஷ்யாவில் தொழிலாளர்கள் மிகவும் சுகமாக வாழ்கிறார்கள்; ரஷ்யாவிலுள்ள பெரிய தொழிற்சாலைகள் அனைத்திலும் வேலை செய்யும் தொழிலாளர்கள் தூங்கி இளைப்பாறுவதற்கென வசதிகளுடன் கூடிய விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன; அந்த விடுதிகளில், தொழிலாளர்கள், தங்கள் வீடுகளைக் காட்டிலும் அதிக வசதியுடன் இராக்காலத்தை கழிக்கலாம்.

"ரஷ்யத் தொழிலாளர்கள்—ஆண், பெண் பாலர்—அனைவரும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் வேலை செய்கிறார்கள்; அவர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு 500 ரூபிளிலிருந்து 5000 ரூபிள்வரை (சுமார் ரூ 405-லிருந்து ரூ. 4,050) சம்பாதிக்கின்றனர்.

"எல்லோரும் எளிய முறையிலேயே உடை உடுத்திருப்பதால் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கும், ஆலை நிர்வாகிகளுக்கும் மிடையே வேற்றுமை கண்டுபிடிப்பது மிகக் கடினம்;

"ரஷ்யத் தொழிற்சாலைகளில் மட்டுமல்லாமல் விவசாயத் தொழில்களிலும் பெரும்பாலும் இயந்திர சாதனங்களே உபயோகிக்கப்படுகின்றன. அங்குள்ள சிறுவர்-சிறுமியர்களும்கூட இயந்திர நுட்பங்களைத் தெரிந்துகொள்வதற்கு ஆர்வமூட்டப்படுகின்றனர்."

—இவ்வாறு, பிரதமர் நேரு, இந்திய சர்க்கார் உள்நாட்டமைச்சர் நடத்திய விருந்துபசாரம் ஒன்றில், ரஷ்ய மக்களின் வாழ்க்கை நிலை பற்றி பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—

"சோவியத் நாட்டில் குழந்தைகள் பராமரிப்பு மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. அங்கு குழந்தைகள் அனைவரும் நன்றாகக் கவனிக்கப்படுகிறார்கள். அங்கு பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் பத்தகப் பாடங்கள் படிப்பது மட்டுமல்லாமல், தங்கள் பாடங்களுக்கு அப்பாற்பட்ட பல நிகழ்ச்சிகளிலும் உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

குழந்தைகள் தங்கள் விடுமுறையை உற்சாகத்துடனும், ஆரோக்கியமாகவும் கழிக்க, ரஷ்யா முழுமையிலும் குழந்தைகளுக்கான விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் மட்டும், இத்தகைய விடுமுறை காலத்தில் தங்கும் விடுதிகளில் சுமார் 50 லட்சம் குழந்தைகள் தங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது."

நேருவின் பணம்

பாலம் விமான நிலையத்தில் பறிபோயிற்று

பண்டித நேருவை வரவேற்க டில்லி பாலம் விமான நிலையத்தில் கூடியிருந்த பெருங் கூட்டத்தில், பிரதமரின மெய்ப் பாதுகாப்பாளரும், மாவட்ட போலீஸ் அதிகாரியுமான மெஹ்தா சர்தார் சிங் என்பவரிடமிருந்த பணம் கொள்ளையிடப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

பிரதமர் நேரு பம்பாயில் கொஞ்சம் பணம் வாங்கி, செலவானது போக எஞ்சிய ரூ 175-10-0-ம், மக்கள் சபை, ராஜ்யங்கள் சபை ஆகியவற்றிற்குள் நுழைவதற்கான இரு அனுமதிச் சீட்டுக்கள் ஆகியவற்றையும் தனது மெய்ப்பாதுகாப்பாளரிடம் தந்திருந்தாராம். மெய்ப்பாதுகாப்பாளர் டெல்லி பாலம் விமான நிலையத்தில் அந்த தொகையையும், அனுமதிச் சீட்டுகளையும் திருட்டுக் கொடுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

கரும்பு சாகுபடி

கடப்பு ஆண்டில், 39,32,000 ஏகராவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்றும்; 5,46,48,000 டன் கரும்பு உற்பத்தியாகுமென்றும் தெரிகிறது.

வெல்லமாக கணக்கிட்டால், உற்பத்தி அளவு 1954–55-ம் ஆண்டில் 55,46,000 டன்னும், 1953—54-ம் ஆண்டில் 44,64,000 டன்னும் ஆகிறது.

காஷ்மீர் பிரச்சினை

பண்டித பந்த் கருத்துக்கு....

பாகிஸ்தானில் பலத்த கண்டனம்

காஷ்மீரில் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் பற்றி ஸ்ரீநகரில் இந்திய உள்நாட்டமைச்சர் பண்டித வல்லப பந்த் கூறியிருக்கும் கருத்துக்களுக்கு எதிரான தாக்குதல் ஒன்று, பாகிஸ்தான் அரசாங்கத்தால், இந்திய வெளிநாட்டிலாகா அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

'காஷ்மீர் பிரச்சினைக்கு பரிகாரம் தேடுவதில் காஷ்மீரில் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்ற நிலைக்கு இனி இந்தியா கட்டுப்பட்டிருக்க முடியாது,' என்று, பண்டித பந்த் கூறியது கேட்டு, பாகிஸ்தான் நாட்டில் உள்ள சுமார் 25 தின இதழ்கள் ஆச்சரியமும் அதிர்ச்சியுமடைந்திருப்பதாகவும், பண்டித பந்தின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் தூதுவர் ராஜா கஜன்பர் அலிகான், பத்திரிகையாளரிடம் பேசுகையில், இப்போது ஏற்பட்டுள்ள நிலையின் விளைவாக, சீக்கிரமே இரு பிரதமர்களின் பேச்சுக்கான நாள் குறிக்கப்படும் என்றும், அந்தப் பேச்சுவார்த்தைகள், பண்டித பந்த் அறிவித்த கருத்துக்களுக்குத் தரப்படும் விளக்கத்தைப் பொறுத்து இருக்கும் என்றும், இந்தியா—பாகிஸ்தான் பிரதமர்கள் சந்திப்பு, காலம் தாழ்த்தப்படுமானல் நிலை இன்னும் நெருக்கடியாகுமென்றும் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

★

எல்லையில் துருப்புகள் குவிகின்றனவாம்!

பாக். பத்திரிகைகள் கூற்று

காராச்சி, ஜூலை 13—

இந்திய-பாகிஸ்தான் எல்லையில், இந்தியத் துருப்புகள் குவிக்கப்படுகின்றன என்று, பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

பாகிஸ்தான் பஞ்சாபில் உள்ள சைல்கோட் எனுமிடத்திலிருந்து வெளிவந்துள்ள அந்தச் செய்தி; எல்லைப் பகுதியில் இராணுவ பூலம்

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

வேலூர் (வ. ஆ.) வேலப்பாடி
17—7—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
என். வி. நடராசன்
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

★

குடந்தை
வெள்ளி விழா பூங்காவில்
17—7—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: எஸ்.எஸ். கோவிந்தசாமி
பேசுவோர்:
கே. கே. நீலமேகம்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.

★

சென்னை—5-வது வட்டம்

15—7—55 மாலை 6 மணியளவில், கழக இல்லில், தோழர் உலகநாதன் தலைமையில் தோழர்கள் பலர் பேசுவர். தேனீர் வழங்கப்படும்.

சென்னை—35-வது வட்டம்

17—7—55 மாலை 6 மணிக்கு தோழர்சோ. இறையரசு தலைமையில் கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் அருகில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் க. தவசு, சோ கிருட்டிணமூர்த்தி, இராசபாதர், ரகுநாதன் ஆகியோர் பேசுவர்.

சென்னை—40-வது வட்டம்

15—7—55ல், கழகக் கட்டிடத்தில் (13, அருணாசல ஆச்சாரி தெரு சென்னை-5) இரவு 7-30 மணிக்கு தோழர் இராசாராம் தலைமையில் தோழர் கா. அப்பாதுரையார் சொற்பொழிவாற்றுவார்.

சென்னை—42-வது வட்டம்

17—7—55 காலை 9 மணிக்கு கழகப் பணிமனை (4, நமசிவாய முதலித் தெரு, திருவல்லிக்கேணி)யில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

சென்னை—சைதாப்பேட்டை

15—7—55 மாலை 4½ மணிக்கு கழக இல்லத்திலிருந்து தோழர் ஜி முத்துகிருஷ்ணன் தலைமையில் ஊர்வலமும், மாலை 6-30 மணிக்கு காரணீஸ்வரர் கோயில் தேரடி மைதானத்தில் தோழர் த தங்கதுரை தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெறும் தோழர்கள் எஸ். எஸ் தென்னரசு, சைதை சம்பந்தம், பி. அண்ணாமலை ஆகியோர் பேசுவர்.

பாரதிதாசன் படத் திறப்பு

சென்னை - வேளாளத் தேனும்பேட்டை தமிழ் இளைஞர் கழக இலவச இரவு பாடசாலைப் பள்ளியில், 16—7—55 சனி மாலை 6-30 மணிக்கு, தோழர் குருபூஷணம் தலைமையில், தோழர் சாதா பாரதிதாசன் படத்தைத் திறந்து வைப்பார்.

விரிவாக்கப்படுவது ஒரு கிழமைக்கு முன்பே துவக்கிவிட்டது என்றும், இன்னும் தொடர்ந்து அந்த வேலை நடைபெறுகிறது கொண்டிருப்பதாகவும் கூறுகிறது.

★

கான்சகோதரர்கள் சந்திப்பு

கான் அப்துல் கபார்கானும், அவரது மூத்த சகோதரரான டாக்டர் கான் சாகிபும், கடந்த 8 ஆண்டுகளுக்குப் பிறகு ஒருவரை யொருவர் சந்தித்து அரைமணி நேரம் அளவளாவியுள்ளனர்.

டாக்டர் கான் சாகிப் பாகிஸ்தான் அமைச்சரவைப் பதவி ஏற்றது கபார்கானுக்குப் பிடிக்காததால், இருவரும் இதுவரையில் சந்திக்க வில்லையாம்.

ஆனால், கடந்த மூன்று நாட்களாக டாக்டர் கான்சாகிப் பஞ்சாப் கவர்னர் மாளிகையில் நோய்வாய்ப் பட்டுக் கிடப்பதை யொட்டியே அவரைக் காண்பதற்கு அப்துல் கபார்கானும், அவரது மகன் அப்துல் வாலிகானும் சென்றனராம்.

கழகக் கூட்டம்

★

உள்ளிக்கோட்டை
வாஞெலி நிலையத் திடலில்
18—7—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: என். அருணசலம்
பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
ப. நாராயணசாமி
எஸ். சிங்காரவேலு

திருச்சி 20-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

17—7—55 காலை 10 மணியளவில், 20-வது வட்ட தி. மு. கழகச் கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

மாநில மாநாட்டு நிதிக்காக

சேலம் விக்டோரியாவில் 'மணி மகுடம்'—நாடகம்

தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்காக, எஸ். எஸ். ராசேந்திரன் நாடக மன்றத்தினரால் தோழர் மு. கருணநிதி எழுதிய 'மணிமகுடம்' நாடகம், சேலம் விக்டோரியாவில், 17-7-55 மாலை 6-30, இரவு 10-30 மணிக்கு (இரு நாடகங்கள்) நடைபெறும்.

"திருக்குறள் வகுப்பு"

சென்னை - பெத்துநாய்க்கன் பேட்டை தாம்பார் கழகச் சார்பில், 16-7-55 பிற்பகல் 2-30 மணிக்கு சென்னை முத்தகிருஷ்ணன் தெரு 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். மயிலை சிவ முத்து அவர்கள், 'சேவ்வி' (இறுதி ஐந்து குறள்கள்) என்பதைப்பற்றி பேசுவார்; தொடர்ந்து திருமதி ஜோதீஸ்வரி அவர்களும் பேசுவார்.

16-7-55 மாலை 6-30 மணிக்கு, இராயபுரம், எண். 59, மன்னர் சாமி கோயில் தெருவிலுள்ள குறள் நெறிக் கழக அறையில், தோழர் இரா. பாது தலைமையில், 'சிற்றினம் சேராமை' என்னும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

திரு.வி.க. மன்ற ஆண்டு விழாவும் திருவள்ளுவர் விழாவும்

சென்னை 20-வது வட்ட பெரவள்ளூர், பேப்பர் மில்ஸ் ரோட், பாகியம் ரெட்டியார் திடலில், 17—7—55 மாலை 6 மணிக்கு, திரு த. வே. முருகேசனர் தலைமையில், தோழர்கள் முனுசாமி, எம். பி., தில்லை, அழகுவேலனர், வி. பாகியம் எம். சி., ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மேற்கு பாகிஸ்தான் இணைப்பு!

கடும் எதிர்ப்புக்கு இலக்காகிறது

முரீ, ஜூலை 14—

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில், மேற்கு பாகிஸ்தான் முழுவதையும் ஒரே அங்கமாக இணைக்கும் கருத்தினை எதிர்த்து, வடமேற்கு எல்லைப்புற மாகில முதன் மந்திரி பேசியதின் விளைவாக, அவரிடம் கருத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால், அவரது மந்திரி சபை கலைக்கப்பட்டு, வேறோர் மந்திரி சபை அமையும் என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தான் பஞ்சாபின் கவர்னர் குர்மானி, மத்திய அரசாங்க நிதி மந்திரி முகம்மது அலி, உள்நாட்டமைச்சர் மீர்ஜா, மற்றும் மும்தாஜ் தௌலத்தானு ஆகியோர், இதுபற்றி கூடி விவாதித்தனர் என்று கூறப்படுகிறது.

முதன் மந்திரி தம் கருத்தை மாற்றிக்கொள்ளாவிட்டால், அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்ற செய்தியை, காராச்சி அரசியல் வட்டாரங்கள் உறுதி செய்திருக்கின்றனவாம்.

10,000 தொண்டர்கள் சிறையிலுள்ளனராம்!

உரிமைக் கிளர்ச்சி மீண்டும் நடைபெற்றே தீருமாம்!

அகாலிதளத்தவர் அறிக்கை

"பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கை ஒலி முழக்கத்திற்குப் பஞ்சாப் சர்க்கார் விதித்திருந்த தடையுத்தரவை ரத்து செய்ததை யொட்டி அகாலிதளம் தன் கிளர்ச்சியை நிறுத்திக்கொண்டாலும்கூட, மேற்படி கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட 10,000-க்கு மேற்பட்ட அகாலிதளத் தொண்டர்கள் விடுவிக்கப்படாமல் இருப்பதாலும், மஞ்சி சாகிபின் புனிதத் தன்மைக்குக் களங்கமேற்படுத்தப்பட்டுள்ளதாலும், இன்னமும் பஞ்சாப் மாநில கோரிக்கைக்குப் பைசல் காணப்படவேண்டியிருப்பதாலும், மீண்டும் அமைதியான—பலாத்காரமற்ற முறையில் எதிர்ப்புக் கிளர்ச்சி கள் நடைபெறும்"

என்று அகாலிதளம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

கத்தியைக்காட்டி வழிப்பறி செய்ய முயன்ற பெண்மணி

மாணவர்கள் மடக்கினராம்!

பகல்பூர், ஜூலை 14—

கட்டாரியைக் காட்டி, கன்னி ஒருத்தி, வழிப்போக்கர் ஒருவரிடம் வழிப்பறி கொள்ளையடிக்க முயன்ற செய்தி ஒன்று எட்டியுள்ளது!

கடந்த திங்கட்கிழமையன்று, மாசக்சக் சாலையில் சென்றுகொண்டிருந்த ஒருவரிடம், பெண் ஒருத்தி கையிலிருந்த கத்தியைக் காட்டி அவரைப் பயமுறுத்தி, அவரிடமிருந்த பையைப் பறித்துக் கொள்ள எத்தனித்திருக்கிறார்.

அவ்வழியே சென்ற மாணவர் கும்பல், இதனைக் கண்டு, அந்தப் பெண் சுழற்றிய கத்திக்கும் அஞ்சாது, பெண்ணைப் பிடித்துக் கொண்டு, வழிப்போக்கர் கொள்ளையிடப்படுவதினின்றும் தப்புவித்து பெண்ணை போலீசாரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

எது பெரிது?—பெண்ணின் துணிச்சலா? மாணவர்களின் துணிச்சலா என்பதையே அப்பகுதி மக்கள் சிந்தித்துக்கொண்டிருக்கக்கூடும்.

அம்பாலா மாநிலத்தில், தபால் பெட்டி ஒன்றில், தபால் சேவகர் ஒருவர் கடிதங்களை எடுத்துப் பைக்குள் போடும்போது, அக்கடிதங்களினூடே சுமார் 3 அடி நீளமுள்ள ஒரு பாம்பு கிடந்தது கண்டு அலறி ஓடினராம்!

இதற்குள் அந்தப் பாம்பு பக்கத்தில் இருந்த சாக்கடைச் சந்தில் புகுந்து ஒளிந்துகொண்டதாம்!

உலக மக்கட் தொகை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆப்பிரிக்கா 21 6 கோடி; வட அமெரிக்கா 23.3 கோடி; தென் அமெரிக்கா 12 1 கோடி; ஆசியா (ரஷ்யா நீங்கலாக) 32 3 கோடி; ஐரோப்பா (ரஷ்யா நீங்கலாக) 40 6 கோடி; சோவியத் ரஷ்யா 21 4 கோடி—என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

இறுதியாக 1954-ம் ஆண்டுக்கென கணக்கிடப்பட்டிருக்கும் மக்கட் தொகை 252 8 கோடியில் 1943-ல் அதிகாரபூர்வமாக கணக்கிடப்பட்டிருக்கும் சீன மக்கட் தொகையான 46.3 கோடியும் சேர்ந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.